பிரித்தானிய தமிழ்மொழிப் பரீட்சை சபை

BRITISH TAMIL EXAMINATION BOARD (BTEB)

www.bteb.org.uk

# தமிழ் – வாசிப்பு பரீட்சை

# TAMIL - READING EXAMINATION

## தரம் (GRADE) - 7

**Version B**

Additional materials:
Soft pencil (type B or HB)
Soft clean eraser

**TIME** 45 minutes

**INSTRUCTIONS TO CANDIDATES**

Do not open this booklet until you are told to do so.

Answer **all** questions.

Write your name, Centre number and candidate number in the spaces on this page.

**Write your answers on the question paper itself.**

Use pencil

At the end of the test you must hand in the question paper to your supervisor.

Dictionaries must not be used.

| Date | Centre Name | Centre Number |
|---|---|---|
| / / | | |

| Candidate : Name | Candidate : Number |
|---|---|
| | |

**This question paper consists of 10 printed pages.**

## PART I

### Questions 1-5

**Look at the text in each question. What does it say? Write the correct letter A, B or C in the box.**

| | | |
|---|---|---|
| 1. **வெண்ணிலா சிகை அலங்காரக் கடை.** தினம் காலை 8.00 முதல் மாலை 6.00 வரை திறந்திருக்கும். இந்த விளம்பரத்தைக் கொண்டு வந்தால் (சனிக்கிழமை தவிர ஏனைய நாட்களில்) சிகை அலங்காரம் செய்ய 5% கழிவு கிடைக்கும். | A. On Saturdays this hairdresser is normally closed.<br><br>B. If you show this advert you can get a cheaper haircut<br><br>C. The hairdresser is less expensive than others | ☐ |
| 2. **தொலைபேசிச் செய்தி**<br>வில்வா கைக்கடிகாரம் திருத்துபவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். உனது கைக்கடிகாரத்தைத் திருத்துவதற்கு 59 பவுண்கள் ஆகும். என்று கூறினார். நாளை அவர்களுக்கு உன் முடிவைத் தெரிவிக்கவும். சுபா | What does Vilva need to do Tomorrow?<br>A. Tell the shop if he wants them to repair his watch<br><br>B. Go to the shop to collect his mended watch<br><br>C. Go to the shop to but a watch at a special sale price | ☐ |
| 3. தை 20ஆம் திகதிக்கு முன் விற்கப்படவேண்டும், 25ஆம் திகதி வரை பயன்படுத்தலாம். இதைத் திறந்த பின் குளிர்சாதனப் பெட்டியில் வைக்கவும். இரண்டு நாட்களுக்குள் சாப்பிட்டு முடிக்கவும். | This product should<br>A. be kept in the fridge until it is opened<br><br>B. be eaten within two days of purchase<br><br>C. be put somewhere cold after opening | ☐ |
| 4. அருமையான விடுதியில் தங்கி இருக்கிறோம். காலநிலை நாங்கள் எதிர்பார்த்ததைவிட அதிக வெப்பமாய் இருக்கிறது. அதனால் நாங்கள் தலைநகரைப் பார்க்கச் செல்லவில்லை. செவ்வாய் திரும்புவோம்.<br><br>வள்ளி, கண்ணன் | What do Ram and Sita say about thier holiday?<br>A. They will visit the capital on their way home.<br><br>B. They expected the weather to be hotter<br><br>C. They changed their plans while on holiday | ☐ |
| 5. மின்னஞ்சல்:<br>அடைபவர்: வசந்தி<br>அனுப்புபவர்: உமா<br>நான் இன்று பல் மருத்துவரைச் சந்திக்கின்றேன். அதனால் தேநீர்க் கடையில் உன்னை சந்திக்கவில்லை. திரையரங்கிற்கு வெளியே, சந்திக்கிறேன். சரிதானே? | Where will the two girls meet this evening<br>A. at the cafe<br><br>B. outside the cinema<br><br>C. at the dentist’s surgery | ☐ |

## PART II

**Questions 6-10**

**Read the following statements in Tamil and decide which applies to each person below writing about live music events. For questions 6-10 write the correct letter A-F in the box.**

**There is one extra name you do not need to use.**

| | |
|---|---|
| ரோஜா | அங்கு சூழ்நிலை நன்றாக இருக்கும் என்பதால் நீ எப்போதும் என்னை மேடைக்கு பக்கத்தில் தான் காண்பாய். என்னைச் சுற்றி இருப்பவர்களுடன் நடனம் ஆடுவதில் எனக்கு மிக விருப்பம். |
| மேரி | இலவசமாக நடைபெறும் விழா என்பதால் அதிகமான பாட்டுகள் இடம் பெறுவது இல்லை. ஆனால் பலதரப்பட்ட நிகழ்ச்சிகள் இருக்கும் என நினைக்கிறேன். |
| சுதாகர் | இந்தக் காலத்தில் நிகழ்ச்சிகளை நேரடியாகப் பார்ப்பதற்கு நுழைவுச் சீட்டுக்கு அதிக பணம் கொடுக்க வேண்டும். எனக்குப் பிடித்த நிகழ்ச்சி நடத்துபவர்களாக இருந்தால் இரண்டு மடங்கு பணம் கொடுக்கத் தயங்க மாட்டேன். |
| அன்ரன் | 'சீடி'யில் ஒலி நன்றாக இருக்கும் என மக்கள் கூறுவார்கள். ஆனால் உணர்ச்சி ஊட்டும் சூழ்நிலை இருப்பதால் நான் இன்னிசை நிகழ்ச்சிக்குப் போவதையே விரும்புகிறேன். |
| வானதி | பொதுவாக நான் இசையரங்கு நிகழ்ச்சிகளுக்குப் போவது உண்டு. இனால் இப்போது இதற்கான பணத்தைச் சேமித்து வேறு விடயங்களில் செலவு செய்வதையே நான் விரும்புகிறேன். |
| சேகர் | 'சீடிக்கள்', படங்கள் ஆகியவற்றை வழக்கமாக நீ இசையரங்குகளில் வாங்குவது நன்று. ஆனால் அவர்கள் அவற்றை இப்போது விற்கும் விலையை விட மலிவு விலைக்கு விற்க முடியாதா? |

**Who says this?**

6. It's worth spending a lot of money to see performers you especially like. ☐
7. At live events, I think it should be possible to buy things at lower prices. ☐
8. I prefer to be in the crowd close to the musicians. ☐
9 My feelings about attending live music events have changes ☐
10. The quality of what I hear is less important than the experience. ☐

## PART III

**Questions 11-15**

**Read the text below about a photographer. Are sentences 11-15 Right(A) or 'Wrong(B)? If there is not enough information to answer 'Right'(A) or Wrong(B). Choose 'Not in the text'(C). For questions 11-15 circle the correct letter A, B, or C on your question paper.**

**கண்ணைக் கவரும் புகைப்படக்கலை**

திருமதி சிவா எதிர்வரும் அக்டோபர் 10ம் திகதி முதல் நவம்பர் 1ம் திகதி வரை தன்னுடைய 41 புகைப்படங்களை பாரதி கலைக்கூடத்தில் காட்சிப்படுத்த உள்ளார். அவர் இயற்கையை அதிகம் விரும்புபவர். அவர் தன்னுடைய கண்களில் பட்டது அனைத்தையும் படம் எடுத்துக் கொள்பவர். புகைப்படம் எடுக்க அவர் உலகம் எங்கும் சுற்றி வருகிறார்.

திருமதி சிவா கண்காட்சியில் அவரது விருப்பத்திற்குரிய "ஆமை: யின் படம் இடம்பெறுகின்றது. அவர் பூங்காவில் நடந்து கொண்டிருந்தபோது, நீர் நிலையில் இருந்த கல் ஒன்றில் ஆமை இளைப்பாறிக் கொண்டிருப்பதைக் கண்டார். அந்த ஆமை அமைதியான இயற்கையை இரசிப்பதற்கு நமக்கு நினைவூட்டுவதாக உள்ளது என அவர் எண்ணினார்.

இந்தக் கண்காட்சியில், அவர் புயல் வீசும்போது, விமானத்தில் இருந்து எடுத்த மூன்று புகைப்படங்கள் இடம் பெறுகின்றன. திருமதி சிவா வானத்தில் பறக்கும்போது பயந்திருந்தாலும், அவர் உடனடியாக புகைப்படக் கருவியை எடுத்து படம் எடுத்துக் கொண்டார். அதில் ஒரு புகைப்படம் "நியூஸ்டே" என்ற சஞ்சிகையிலும் இடம்பெற்றது. இந்த சம்பவம் பற்றி அவர் கூறுகையில் "இதில் நான் பெரும் வியப்படைந்தேன், ஏனெனில் விமானத்தில் பறப்பதை நான் விரும்புவதில்லை".

2002 இல் திருமதி சிவா தீவிரமாகப் புகைப்படம் எடுக்க ஆரம்பித்தார். இவருடைய குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் இவருடைய படங்கள் வித்தியாசமானதாக இருப்பதாக தொடர்ந்து கூறியதால், தன்னுடைய புகைப்படங்களைக் காட்சிப்படுத்த ஆரம்பித்தார். 30 வருட புகைப்படப்பிடிப்பின் பின்னர் இதைக் கற்பதற்கு ஆரம்பித்தார். "நான் எல்லாவற்றையும் ஒழுங்கு முறையில் செய்வது இல்லை. ஆனாலும் முன்னேறுவதற்கு முயற்சிக்கிறேன்." என அவர் கூறினார்.

11. Mrs Siva only takes photographs of animals and people

A. Right B. Wrong C. Not in the text.

12. Mrs Siva has exhibited her photographs around the world

A. Right B. Wrong C. Not in the text.

13. Mrs. Siva photographed the turtle because it looked to peaceful.

A. Right B. Wrong C. Not in the text.

14. Mrs. Siva was very excited when one of her photo was published.

A. Right B. Wrong C. Not in the text.

15. Mrs. Siva first exhibited her work on the advice of a photography teacher.

A. Right B. Wrong C. Not in the text.

## PART IV

**Questions 16-20**

**Read the text below about oliver Cassero, a racing driver.**

**For each questions 16-20, write the correct letter A, B, or C in the box.**

**வேகவழியில் வாழ்க்கை**

மோட்டார் சைக்கிள் வீரர் ஆலிவர் காசரோ மோட்டார் சைக்கிள் ஓட்டும் பயிற்சியைத் தன்னுடைய சிறு வயதிலேயே ஆரம்பித்தார். அவருடைய பத்தாவது பிறந்த நாளுக்கு, அவருடைய பெற்றோர்கள் அவருக்கு மோட்டார் சைக்கிள் ஒன்றை, அருகில் இருக்கும் கடையிலிருந்து வாங்கிக் கொடுத்தனர். தனது பதினான்கு வயதுக்குள்ளேயே ஐரோப்பிய மோட்டார் சைக்கிள் பந்தயங்களில் வெற்றி பெற்றார்.

ஆலிவருக்கு மோட்டார் சைக்கிள் பந்தயத்தில்தான் மிகவும் ஈடுபாடு. “பந்தயங்களில் முதலில் வருவதில்தான் எனக்கு உண்மையான திருப்தி கிடைக்கிறது” என ஆலிவர் ஒப்புக் கொள்கிறார். “முதன் முதலில் மோட்டார் சைக்கிள் ஓட்டும்போது, அதன் அதிவேகம் ஆச்சரியப்படுத்துகிறது. ஆனால், ஓட்டிப் பழகிய பிறகு அதிவேகம் ஒன்றும் முக்கியமாகதாகத் தோன்றுவதில்லை” எனச் சொல்கிறார்.

ஆலிவரின் வாழ்க்கை மிகவும் சுறுசுறுப்பானது. தமது தோழர்களுடன் பலவிதமான உடற்பயிற்சிகளைச் செய்கிறார். பிறகு, நிச்சயமாக ஏதாவது பத்திரிகை ஊடகங்களுடன் நிகழ்ச்சி இருக்கும். ஆலிவர், பத்திரிகை ஊடகங்களின் நேர்முக உரையாடல்களைவிட, சைக்கிள் பயணம், நீச்சல், ஓட்டம் முதலான உடற்பயிற்சிகளிலேயே அதிகம் ஆர்வம் இருப்பதாகச் சொல்கிறார். ஆலிவர் இத்தகைய புகழைப் பெறுவதற்கு அவருடைய பெற்றோர்களின் ஆதரவு முக்கியக் காரணம். ஆனால், ஆலிவரின் அம்மா, பந்தயங்களைப் பார்க்க ஒருபோதும் வருவதில்லை. “அவர் தன்னால் பந்தயங்களைப் பார்க்க முடியாது என்கிறார்” என ஆலிவர் சொல்கிறார். “அதனால், எப்போதும் பந்தயம் முடிந்தவுடன், நான் தொலைபேசியில் அம்மாவை அழைத்து எனது வெற்றியைத் தெரிவித்துக் கொள்வேன்.”

ஆலிவருக்கு மற்ற ஆபத்தான விளையாட்டுக்களை முயன்று பார்க்க ஆவல் இருந்தாலும், ஒப்பந்தப்படி வேறு விளையாட்டுக்களில் ஈடுபட முடியாது. “உண்மையாகப் பார்த்தால்,” ஆலிவர் சொல்கிறார், “மோட்டார் சைக்கிள் ஓட்டுவதே மற்ற எல்லாவற்றையும் விட நான் விரும்புவது. அதனால், நான் அதைப் பற்றிக் கவலைப்படுவதில்லை.”

16. Oliver first started motor cycle racing ☐

A. as a result of being given a present

B. after being taken to watch a race

C. when he was only fourteen years old.

17. What does Oliver like most about motor cycle racing ☐

A. the speed

B. the competition

C. the excitement

18. What does Oliver like least about his work

A. practising with his team

B. talking to the press

C. keeping himself fit

19. What does Oliver say about his mother

A. She doesnt really agree with him doing motor cycle racing

B. She phones him immediately afte each race ends

C. She prefers not to attend the races in person

20. How does Oliver feel about dangerous sports

A. frustrated that he’s not allowed to do any others

B. keen to take part in as many as possible

C. satisfied with doing his favourite one

## PART V

**Questions 21-25**

**You are going to read an article about walking holidays. Choose from list (A-F) the sentence which best summarises each part (21-25) of the article. Circle the correct letter A-F on your question paper. There is one extra sentence you do not need to use.**

A. There are a range of options for people who want a walking holiday.

B. Working on your leg muscles inba gym is good preparation

C. It is important to build up your strength before a walking holiday.

D. Taking basic precautions will make the trip more enjoyable.

E. Walking is a chep way to keep fit

F. It is important to choose an appropriate time to go on a walking trip.

நடைப்பயண விடுமுறைகள்

21. ☐ வேகமான 30 நிமிட தினசரி நடைப்பயிற்சி, நல்ல ஆரோக்கியத்தைத் தரவும், உடலில் கொழுப்பின் அளவைக் கட்டுப்படுத்தவும் உதவும் என்பது வல்லுனர்களின் கருத்து. மாதந்தோறும் உடற்பயிற்சி சாலைகளுக்குப் பணம் கொடுக்கவேண்டும் என்றோ விசேடமான உடற்பயிற்சி சாதனங்களுக்குச் செலவு செய்யவேண்டும் என்றோ அவசியமில்லை.

22. ☐ களைப்பான கால்களும், வலிக்கும் பாதங்களும் இப்பயிற்சிக்குத் தடையானாலும் விரைவில், இந்தச் சிறிய உபாதைகளைத் தாங்கிக் கொள்ளக் கற்றுக் கொள்வீர்கள். நீங்கள் பலநாட்களாக நடைப்பயிற்சி செய்து வரும்போது, காலநிலையும் சுகத்தைப் பாதிக்கலாம். அதனால், வெயில் குறைவான காலத்தில் மட்டுமே நடக்கத் திட்டமிடுங்கள்.

23. ☐ நீண்ட பயணங்களுக்கு, தனியாகச் செல்வதா, நண்பர்களுடன் அல்லது பயிற்சியாளர் குழுக்களுடன் செல்வதா எனத் தீர்மானித்துக் கொள்ளுங்கள். உங்களுடைய உடல்வலிமைக்கு ஏற்ற நடைப்பயணத் திட்டத்தை மட்டுமே தேர்வு செய்யவேண்டும் என்பதை நினைவில் வையுங்கள்.

24. பயணத்திற்கு முன்பு, சில குறுகிய நடைப் பயிற்சியைச் செய்யுங்கள். ஒவ்வொரு முறையும் கொஞ்சம் அதிக தூரம் செல்லுங்கள். நாள் ஒன்றுக்கு ஐந்து மணி நேரம் தொடர்ந்து நடக்கும் ஆற்றல் பெறுதல் அவசியம்.

25. நடப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட காலணிகளையும், முதுகில் அணியக் கூடிய பை ஒன்றையும், அதனுள் குடிநீரையும், சக்தி தரக்கூடிய ஆரோக்கியமான சிற்றுண்டியையும், வரைபடத்தையும் வைத்துக் கொள்ளுதல் அவசியம். அதன் பின், நன்றாக நடைப்பயணத்தை அனுபவியுங்கள்.

## PART VI

### Questions 26-30

**Read this article about a write. Some sentences have been taken out. Choose the correct sentence (A-F) to go in each space (26-30). Write the correct letter A-F on your question paper. There is one extra sentence you do not need to use.**

எங்கே நான் எழுத விரும்புகிறேன்

எனது வீட்டு அலுவலகம் இளஞ்சிவப்பு நிற சுவர்களுடன் ஊதாநிற சுவர்களுடனும் ஊதாநிற கம்பள நிலவிரிப்புடனும் இருப்பது எனக்குப் பிடிக்கும். எனது கணவருக்கோ அல்லது குழந்தைகளுக்கோ இந்த கடுமையான நிறங்கள் பிடிப்பது இல்லை.
(26).......

எனது கணவருடன் நான் தங்கும் படுக்கை அறைக்கு அடுத்ததாக இது உள்ளது. படுக்கை அறைக்கு அருகாமையில் இருப்பது எனக்கு வசதியாக இருக்கிறது.
(27).......

காலை ஆகாரத்தை உண்ட பின் வழக்கமாக எனது ஆபீசுக்கு காலை 9 மணிக்கு வந்துவிடுவேன். நுான் பார்வைக்கு அழகாக இருக்கவேண்டும்.
(28)......... அதாவது உதட்டுச் சாயம் பூசி, கண்ணுக்கு மை தீட்டி நேர்த்தியான உடைகளை அணிந்து பார்ப்பதற்கு அழகாகக் காட்சியளிப்பேன். இது சிறப்பாக வேலை செய்ய உதவுகிறது.

எனது மேசை மிகப் பெரியது. அறையின் மூன்றிலொரு பங்கை அது எடுத்துக் கொண்டுள்ளது.
(29)......... இந்த இடத்தில் தான் நான் இருப்பேன். என்னைச் சுற்றி கணினி, தொலைபேசி புத்தகங்கள் இருக்கும். அறை முழுவதும் புகைப்படங்கள் நிறைய இருக்கும்.
(30).......... இது சுவரில் மிகச் சரியான இடத்தில் உள்ளது.

A. நான் நல்ல சிந்தனையோடு எழுத வேண்டுமானால் நான் அழகாக வேலைக்கு உடை அணியவேண்டும்.

B. எனக்குப் பிடித்த படம் எனது கல்யாணத்தில் எடுத்த படம்.

C. வீட்டில் இந்த ஒரு அறையில் மட்டுமே இவைகளைப் பயன்படுத்த எனக்கு அனுமதி உண்டு.

D. இது நவீனமான ஒன்று. மரத்தினால் ஆக்கப்பட்டு மேற்பகுதிக்குத் தோல் போடப்பட்டுள்ளது.

E. இணையத்தொடர்பு போல் பிரயோசனம் உள்ளது. இருந்தும் புத்தகங்களில் எனது கருத்துக்ளைப் படித்தறிவேன்.

F. எனது படுக்கை உடையுடனேயே நான் இந்த அறைக்குப் போய் இரவில் எனது மின் அஞ்சலகளைப் பார்க்கலாம்.

Blank Page